# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 51 பிரசோற்பத்தி தை 03 17.01.1992 வெள்ளி


★ பொலிஸார் ஒலிபெருக்கியில் அறிவிப்பு

## தேக்கவத்தைக் குடியிருப்பாளர்களை கிராமத்தை விட்டுவெளியேற உத்தரவு

வவுனியா நகருக்கு அருகிலுள்ள தேக்கவத்தைக் கிராமத்தில் குடியிருக்கும் 32குடும்பங்களையும் அங்கிருந்து இடம்பெயருமாறு பொலிஸாரால உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுக்கு பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

தேக்கவத்தைக் கிராமத்தில் வசிக்கும் முப்பத்திரண்டு குடும்பங்களும் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறிவிட வேண்டுமென்று வவுனியா அரசாங்க அதிபரினால் பொலிஸார் மூலம் ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டது.

...04ஆம் பக்கம் பார்க்க

# மன்னாரில் புலிகள் அதிரடித்தாக்கு

# 10 படையினர் ஸ்தலத்தில் பலி!

## முகாமிலிருந்து 350 யார்தூரத்தில் வைத்து படையினர் தாக்கப்பட்டனர்

**மன்னாரில் நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 10 இராணுவத்தினர் பலியாகினர், பலர் காயமடைந்தனர். படையினரிடமிருந்து பல ஆயுதங்களும் மீட்கப்பட்டன.**

நேற்றுக்காலை 7 45 மணியளவில் புதிதாக அமைக்கப்பட்ட மன்னார் மாதிரிக்கிராமம் முகாமிலிருந்து வெளியேறிய படையினரே புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்கானவர்களாவர்.

சுமார் 20 பேரடங்கிய குழுவாகப் படையினர் முகாமிலிருந்து வெளியேறினர். வெளியேறிய படையினர் மீது முகாமிலிருந்து சுமார் 350 யார் தூரத்தில் வைத்து புலிகளின் அணியொன்று அதிரடித் தாக்குதலை மேற்கொண்டது.

இத் தாக்குதலினால் 10 படையினர் ஸ்தலத்திலேயே பலியாகினர் ஏனையோர் காயங்களுடன் முகாமுக்கு

...04ஆம் பக்கம் பார்க்க

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மன்னார் அதிரடித்தாக்குதலில் விடுதலைப்புலிகளால் கைபற்றப்பட்ட ஆயுதங்கள்:

ரி-56II-2, ரி-56 I-2, ரி-56-2, ரி-81-3, ரி-56 ரவைக்கூடுகள்-14, ரி-81 ரவைக்கூடுகள்-2, ரி-81 துப்பாக்கிஷெல்-2, ஏ.கே ரவைகள்-560, தொலைத்தொடர்பு கருவி-1, திசைகாட்டிக்கருவி-1

## போலி அமெ. டொலர் நோட் லெபனான் பிரஜை கைது

போலி அமெரிக்க டொலர் நோட்டுக்களை இலங்கை வங்கியில் மாற்ற முயன்றதாக லெபனான் பிரஜை ஒருவர் இரகசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவர் 5000ரூபா காசுப்பிணையிலும் 25ஆயிரம் ரூபா

—04 ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவிலிருந்து குருநகருக்கு தொடரும் ஷெல் தாக்குதல்

மண்டைதீவில்நிலைகொண்டிருக்கும் படையினர் குருநகர் கடற்கரையோரப் பகுதிகளை நோக்கி நேற்று முற்பகல் 11.30 மணியளவிலிருந்து ஆறுக்கு மேற்பட்ட ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

கடற்கரையோரப் பகுதிகளிலுள்ள குடிமனைகளுக்குள் ஷெல்கள் வீழ்ந்து

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பூநகரி இராணுவத்தினர் கடற்பகுதி நோக்கிச் சூடு

பூநகரி - கல்முனைப் பகுதிகளில நிலை கொண்டிருக்கும் படையினர் நேற்று பிற்பகல் துப்பாக்கிச் சூட்டினை கடற்பகுதியை நோக்கி மேற்கொண்டபடியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது,

மாலை நேரப் பகுதிகளில் கடற்பரப்பில சென்று கொண்டிருந்த கடற்படையினர் தென்மராட்சி கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலகளை மேற்கொண்

—04 ஆம் பக்கம் பார்க்க

## வலி.வடக்கில் நேற்று வை-12 விமானக் குண்டு வீச்சு

வலிவடக்குப் பகுதியில் வை - 12 விமானம் நேற்று. பிற்பகல 2 30 மணியளவில குண்டு வீச்சுத்தாக்குதலகளை மேற்கொண்டது,

வசாவிளான், தெல்லிப்பழைப் பகுதிகளை வட்டமிட்டு 4 குண்டுகளை கட்டுவன் பகுதியிலஉள்ள வீடுகளை நோக்கி வீசியதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதனால அப் பகுதியில கட்டிடங்கள், வீடுகள் பல சேதமடைந்தன. 07

## அகதிகளின் நிவாரண மோசடி கையும் மெய்யுமாகப் பிடிபட்டது

## கியூபாவில் மரண தண்டனை

கியூபாத் தலைவர் பிடல் கஸ்ரோவின் அரசைக் கவிழ்க்க முயற்சித்த மூவருக்கு கியூபா அரசு மரண தண்டனை விதிக்கவுள்ளது. மரண தண்டனையை நிறைவேற்றவேண்டாம் என அமெரிக்க அரசு கோரியுள்ளது.

இந்த மூன்று கியூபா நாட்டவர்களும் சிலகாலம் அமெரிக்காவில் வசித்துவிட்டு கியூபா திரும்பியவர்கள் எனக் கூறப்படுகிறது.

## 'புஷ் மரணமானார்'... சி. என். என். அறிவிக்கவிருந்தது!

அமெரிக்க ஜனாதிபதி புஷ் அண்மையில் ஜப்பானில் விருந்துபசாரம் ஒன்றில் மயங்கி வீழ்ந்தபோது அவர் மரணமாகி விட்டார் என அறிவிக்க தயாரானது அமெரிக்காவின் பிரபல தொலைக்காட்சி நிறுவனமான சி. என் என்.

புஷ்ஷின் டாக்டர் என்று தன்னை அறிமுகப்படுத்திய

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கர்நாடக அகதிகளுக்கு ரஜனிகாந்தும் உதவி

கர்நாடக வன்முறைகளினால் பாதிக்கப்பட்டு தமிழகம் வந்த தமிழக அகதிகளுக்கு கர்நாடகத்தவரும் பிரபல தமிழக நடிகருமான ரஜனிகாந்த் உதவியளித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் அகதிகளை நேரிற் சந்தித்துபுடைவைகள் போன்றவற்றை அன்பளிப்பாக கொடுத்து வருகிறாராம்,

—04 ஆம் பக்கம் பார்க்க

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில்

## அனுரா பண்டாரநாயக்கா இஷ்டம்போலச் செயற்படுகிறார்

அனுரா பண்டாரநாயக்கா ... கட்சிக்கூட்டங்களையும்

## பிலிப்பைன்ஸ் இராணுவம் மீது

ஒருவர் இரகசிய பொலிஸா ரால் கைது செய்யப்பட்டு

பிணையிலும் 25 ஆயிரம் ரூபா

—04 ஆம் பக்கம் பார்க்க

## பிலிப்பைன்ஸ் இராணுவம் மீது பெண் கெரில்லாக்கள் தாக்கு

பிலிப்பைன்ஸ் கொர்டிவரா மலைப் பிராந்தியத்தில் கம்யூனிஸ்ட் கொரில்லாக்களின் பெண்கள் அணியொன்று நடத்திய அதிரடித் தாக்குதலில் 14 பிலிப்பைன்ஸ் இராணுவத்தினர் பலியாகினர் 11 பேர் படுகாயமடைந்தனர்.

இராணுவ வாகன அணியொன்றை வழி மறித்து இப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## 13 தமிழ் இளைஞர்கள் ரயில் நிலையத்தில் கைது

களனிப் பகுதியில் உள்ள வனவாசல ரயில் நிலையத்தில் நின்ற பதின்மூன்று தமிழ் இளைஞர்களை சந்தேகத்தின்பேரில் பேலியகொட பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் சம்பந்தமான இவர்கள் நுவரெலியா பகுதியைச் சேர்ந்த

—04 ஆம் பக்கம் பார்க்க

## அம்பாறையில் தேடுதல் 135 தமிழ் இளைஞர் கைது

அம்பாறை மாவட்ட ஆலையடிவேம்பு, பெரியகுளம் பகுதிகள் விசேட அதிரடிப் படையினரால் கடந்த 11 ஆம் திகதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டது.

இத் தேடுதல் வேட்டையின் போது 135 தமிழ் இளைஞர்கள் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டனர்.

...04 ஆம் பக்கம் பார்க்க

## அகதிகளின் நிவாரண மோசடி கையும் மெய்யுமாகப் பிடிபட்டது

மட்டக்களப்பு மாவட்டத்தில அகதிகளின் நிவாரணத்தில இடம் பெற்ற மோசடி தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில அகதிகளுக்காக 5 லட்சத்து 19 ஆயிரத்து 630 ரூபா 72 சதம் பெறுமதியான லக்ஸ்பிறே பருப்பு என்பன கொள்வனவு

—04 ஆம் பக்கம் பார்க்க

## தீவக மக்களை தற்காலிகமாக குடியமர்த்த நடவடிக்கை

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் அகதிகளாக பாடசாலைகளில்தங்கியுள்ள தீவக மக்கள் கிளாலி, கெற்பலி போன்ற இடங்களில் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் தங்கியிருந்தவர்களில் அநேககுடும்பங்களைச்சேர்ந்தவர்கள் ஏற்கனவே அப்பகுதி

— 04 ஆம் பக்கம் பார்க்க

---

## குமண கப்பலில் நோயாளர் பயணம்

கொழும்பு வைத்தியசாலையில சிகிச்சை பெறுவதற்காக யாழ் ஆஸ்பத்திரியில பதிவு செய்யப்பட்ட 36 நோயாளர்கள் குமண கப்பலில அழைத்துச் செலப்பட்டனர்.

சுமார் மூன்றுமாத இடைவெளிக்குப் பின்னர் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த நோயாளர்களே இக்கப்பலில சென்றுள்ளனர், 07

## இஷ்டம்போலச் செயற்படுகிறார்

அனுரா பண்டாரநாயக்கா அண்மைக்காலமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மத்திய குழுவின் ஆலோசனையின்றி தன் இஷ்டப்படி கட்சி வேலைகளில் ஈடுபட்டு வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்சிக்கூட்டங்களையும் இவர் பிரதம அமைப்பாளர் என்ற முறையில் அடிக்கடி கூட்டிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மஹியங்கன வர்த்தகரும் சுதந்திரக்கட்சி பிரமுகருமான

—04 ஆம் பக்கம் பார்க்க

## முஸ்லிம் மாணவர், ஆசிரியரை மன்னாருக்குத்திரும்பப் பணிப்பு

மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து சென்று புத்தளத்தில் தங்கியிருக்கும் முஸ்லிம் மக்களை மீண்டும் மன்னாரில் குடியேற்றும் அரசின் நடவடிக்கைகளை யடுத்து புத்தளத்தில் தங்கியுள்ள சகல முஸ்லிம் ஆசிரியர்களும், மாணவர்களும் மன்னாருக்குத் திரும்பி விட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.

உத்தரவிட்டவாறு ஆசிரி

—04 ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பில் பொதுமக்கள் மீது படையினர் துப்பாக்கிச் சூடு

மட்டக்களப்பில் படையினர் பொதுமக்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்யும் சம்பவங்கள் தினமும் அதிகரித்து வருகின்றன.

கடந்த வியாழனன்று பாலையடிவெட்டை இராணுவ முகாமிலிருந்து சென்ற படையினர் காக்காச்சிவெட்டை கிராமத்தைச் சுற்றிவளைத்து துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதில் குடும்பத்தர் ஒருவர் பலியானார் படையினரால்

...04 ஆம் பக்கம் பார்க்க

## எம். பிக்களுக்கு வழங்கப்பட்ட அபிவிருத்திநிதி துஷ்பிரயோகம்;

# ஆராய அரசு தீர்மானம்!

### விசேட ஆணைக்குழுவும் நியமிக்கப்படலாம்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அபிவிருத்தி நிதி சரிவரப்பயன்படுத்தப்பட்டதா என்பது குறித்து ஆராயப்படவுள்ளதாக அறியப்படுகின்றது.

இது குறித்து ஆராயவென ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரண்டு வருட காலமாக அரச மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அபிவிருத்தி நிதி பயன்படுத்தப்பட்ட விதம் பற்றியே அரசினால் ஆராயப்படவுள்ளது.

ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் அவரது பகுதிக்கான அபிவிருத்திக்கு என ஒவ்வொரு நிதியாண்டிலும் தலா 25 லட்சம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சில உறுப்பினர்கள் இந்த நிதியை துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் அரசுக்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் சொல்லப்படுகின்றது.

## அதிருப்தியாளர்குழு முக்கியஸ்தர்

# வின்சென்ற் பெரேரா கைது!

முன்னாள் எட்டியாந்தோட்டைப் பாராளுமன்ற உறுப்பினரும், அதிருப்தியாளர்குழு முக்கிய பிரமுகர்களில் ஒருவருமான வின்சென்ற் பெரேரா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

எட்டியாந்தோட்டையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் பொறுப்பேற்கச் சென்ற சமயம் ஏற்பட்ட சம்பவமொன்றைத் தொடர்ந்தே அவர் செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தடை செய்யப்பட்ட பொருள்களை வடபகுதிக்கு லொறிகளில் எடுத்துச் செல்ல உதவியதாக வின்சென்ற் பெரேரா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## எம். ஜி. ஆர். பவள விழா!

தமிழக முன்னாள் முதல்வர் அமரர் எம். ஜி. ஆரின் 75 ஆவது பிறந்தநாள பவள விழா இன்று எம். ஜி. ஆர். முன்னேற்றக் கழகத்தினால் மிகவும் எளிமையான முறையில் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் தாவடியிலுள்ள எம். ஜி. ஆர் முன்னேற்றக்கழகத் தலைமையகத்தில பொங்கல் பொங்கிக் குழந்தைகளுக்கு வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## நாயைக் கொல்பவருக்கு 25 ரூபா; செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும்!

விசர் நாய்க் கடிக்கு உள்ளாகும் நோயாளர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையடுத்து கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்களை ஒழிக்கும் துரித முயற்சியில் செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டுள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாகக் கட்டாக்காலியாக அலைந்து திரியும் நாய்களை அழிப்பவர் ஒருவருக்கு நாய் ஒன்றுக்கு 25 ரூபா வீதம் வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தந்தப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரியிடம் நாயைக் கொன்றதற்கான உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தைப் பெற்று அதனைச் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் ஒப்படைத்து இச் சன்மானத்தைப் பெற முடியும்.

இங்கு விசர் நாய்க் கடிக்கான தடுப்பு மருந்துகள் இன்மையால் கட்டாக்காலி நாய்களை ஒழிக்கும் இந்த முயற்சியில் சகலரும் ஈடுபடவேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (04, 19)

## நிர்வாக சேவை பயிலுநர்களுக்கு கொழும்பில் தமிழில் பயிற்சி!

வடக்கு கிழக்கு நிர்வாக சேவைப் பட்டதாரிப்பயிலுநர்களுக்கான ஒரு மாத காலப் பயிற்சி கடந்த புதன்கிழமை கொழும்பில் அமைச்சர் வெண்டன் பெரேராவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழ் மொழியில் நடைபெறும் இப்பயிற்சியில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் சேவை புரிந்த 170 பட்டதாரிகள் பங்குபற்றுகின்றனர்.

## கண்ணிவெடி அகற்றும் 3 கப்பல்களை பாகிஸ்தான் வாங்குகிறது!

பாகிஸ்தான் பிரான்ஸிடமிருந்து கண்ணிவெடி அகற்றும் மூன்று கப்பல்களைக் கொள்வனவு செய்யவுள்ளது.

கடந்த வளைகுடாப் போரின்போது பிரான்ஸினால் பயன்படுத்தப்பட்ட மூன்று கப்பல்களையே பாகிஸ்தான் தற்பொழுது வாங்கவுள்ளது.

## பாடசாலை அபிவிருத்தியில் பெற்றோர் ஈடுபடுத்தப்படுவர்

பாடசாலை அபிவிருத்தியில் பெற்றோர்களை நேரடியாகக் கலந்து கொள்ளச் செய்யும் திட்டம் ஒன்றை நாடு பூராவும் விரிவாகச் செயற்படுத்த கல்வி அமைச்சு உத்தேசித்துள்ளது.

இச்செயற்பாட்டுக்கென யாழ் கல்விப் பிராந்தியத்தில் 15 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன

மண்டைதீவு ம. வி., நெடுந்தீவு ம. வி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி., இராமநாதன் கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி, இடைக்காடு ம. வி, சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி, மல்லாகம் ம. வி., கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, சிதம்பராக்கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, கனகரத்தினம் ம. மகாவித்தியாலயம் என்பனவே இப்பாடசாலைகளாகும்.

இச் செயல் முறையைக் நடைமுறைப்படுத்த இணைப்பதிகாரி ஒருவரைத் தெரிவு செய்து உடனடியாகத் தமக்கு அனுப்பி வைக்குமாறு சகல கோட்டத்துக்குப் பொறுப்பான கல்வி அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (15)

## பொத்துவில் ரயில்பாதை நீடிப்புக்கு ஈரான் அரசு உதவி வழங்கும்!

மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை ரயில் பாதையை நீடிக்கும் திட்டத்திற்கு உதவி வழங்க ஈரான் அரசு முன்வந்துள்ளது

இது பற்றி ஆராயவென ஈரானிய உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று தற்பொழுது இலங்கை வந்துள்ளது.

இக்குழுவினர் நிதியமைச்சு மற்றும் புகையிரதப் பகுதி அதிகாரிகளுடன் இங்கு பேச்சு நடாத்துவர்,

## பீரங்கித் தாக்குதல்

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு எட்டு மணியளவில் சுழிபுரம் மேற்கு திருவடி நிலைப் பகுதிக் கடலில் கடற்படைக் கப்பலில் இருந்து சரமாரியான பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டது. சேத விவரம் தெரியவில்லை. (13)

## தீவகக் கூட்டுறவு ஒன்றியம்

தீவகக் கோட்டக் கூட்டுறவு ஒன்றியத்திற்கெனப் புதிய அலுவலகம் ஒன்று விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது. இவ்வொன்றியத்திற்கென உத்தியோகத்தர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். (46)

# கத்தோலிக்க திருச்சபைக் குழுவும் யாழ் வருகிறது!

### மூன்று ஆயர்களும் இடம்பெறுகிறார்கள்

கத்தோலிக்க திருச்சபையின் தூதுக்குழுவொன்று சமாதானத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளும் மூகமாக யாழ்ப்பாணத்திற்கு விரைவில் விஜயம் செய்யவுள்ளது.

கண்டி, குருநாகல், மட்டக்களப்பு ஆயர்கள், ஏழு துறவற சபைகளின் தலைவர்கள் இத்தூதுக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

சமாதானத்துக்கான இத்தூதுக்குழு யாழ் நகர் வருவதற்கான அனுமதியைப் பெறுவதில் துரிதம் காட்டி வருகின்றது.

ஏற்கனவே மற்றொரு கிறிஸ்தவக் குழுவும் இங்கு வந்து சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது (14)

## குவைத்வேலைவாய்ப்பு; 40,000 ரூபா செலுத்தியோரில்

# 65 பேர் கொழும்பு திரும்பினர்!

### 6 பெண்களுக்கு நடந்தது என்ன?

கொழும்பிலுள்ள அரபு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமொன்றினால் குவைத்திற்கு கூட்டிச் செல்லப்பட்ட எழுபத்தொரு இலங்கையர்கள் நிர்க்கதியான நிலையில் அங்கு கைவிடப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர்களில் 65 பேர் நேற்று முன்தினம் மீண்டும் இலங்கையை வந்தடைந்தனர்.

...றது.

இந்த 71 பேரும் குவைத்தில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கென குறித்த நிறுவனத்துக்கு தலா 40 ஆயிரம் ரூபாப் படி பணம் செலுத்தியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அணு ஆயுத உற்பத்தியில் ஈராக் மீண்டும்?

### சி. ஐ. ஏ. அறிவிப்பு

வளைகுடாப் போரின் போது ஈராக்கின் ஆயுத உற்பத்தி நிலையங்கள் அமெரிக்க மற்றும் நேசப் படைகளினால் நாசமாக்கப்பட்டு விட்ட போதிலும், ஈராக் மீண்டும் அணு மற்றும் இரசாயன, உயிரியல் குண்டுகளை மீண்டும் உற்பத்தி செய்யக் கூடிய வல்லமையைக் கொண்டிருப்பதாக அமெரிக்க உளவு நிறுவனமான சி. ஐ. ஏ தெரி...

## குருநகர்க் கடலில் இராணுவச்சூடு!

### ஒருவர்காயம்; மூன்றுமீனவர் மயிரிழையில் தப்பினர்

## அன்னை திரேசா வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார்!

### ஏழைகளுக்கான பணி தொடருமென்கிறார் அவர்

அமெரிக்கக் கலிபோர்ணியா வைத்தியசாலையில்...

...டோர் நிலையங்களுக்கு நிதி சேகரிப்பதற்கென பணியை...

அங்கு கைவிடப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர்களில் 65 பேர் நேற்று முன்தினம் மீண்டும் இலங்கையை வந்தடைந்தனர். ஆனால் குவைத்தில் கைவிடப்பட்ட எஞ்சிய ஆறு பேரினதும் நிலை பற்றித் தெரியவில்லையெனவும், இவர்கள் அறுவரும் பெண்களெனவும் தெரிவிக்கப்படுகின்

## ஒருவர் காயம்; மூன்று மீனவர் மயிரிழையில் தப்பினர்

நேற்று முன்தினம் குருநகரில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் நான்கு பேர் மீது கல்முனைக் கடலில் வைத்து இராணுவத்தினர் துப்பாக்கி பிரயோகம் செய்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

மண்ணித்தலையில் இருந்து இராணுவத்தினர் சுட்ட பொழுது மீனவர்களில் ஒருவர் கழுத்தில் காயமடைந்தார். இவர் தற்பொழுது யாழ் ஆஸபத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

மற்ற மூவரும் மயிரிழையில் உயிர் தப்பிக் கரை சேர்ந்துள்ளார்கள். (16)

## வெளியேறினார்!

அமெரிக்கக் கலிபோர்னியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அன்னை திரேசா பூரண சுகமடைந்த நிலையில் நேற்று முன்தினம் வைத்தியசாலையை விட்டு வெளியேறினார்.

81 வயதான இந்தியக் குடியுரிமை பெற்ற அன்னை திரேசா இந்தியாவில் தன்னால் பராமரிக்கப்படும் சிறுவர்கள் மற்றும் கைவிடப்பட்

### ஏழைகளுக்கான பணி தொடருமென்கிறார் அவர்

டோர் நிலையங்களுக்கு நிதி சேகரிப்பதற்கான பணியை மேற்கொண்டு மெக்ஸிக்கோவுக்கு பயணத்தைத் தொடரப் போவதாக அறிவித்துள்ளார்.

ஏழை, எளியவர்களுக்கான தன் பணி தொடரும் எனவும் அங்கு அன்னை திரேசா பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

யன, உயிரியல் குண்டுகளை மீண்டும் உற்பத்தி செய்யக் கூடிய வல்லமையைக் கொண்டிருப்பதாக அமெரிக்க உளவு நிறுவனமான சி. ஐ. ஏ தெரிவித்துள்ளது.

அணு ஆயுத உற்பத்தியில் மீண்டும் ஈடுபடுவதற்குப் போதுமான தொடர்புகளை ஈராக் கொண்டிருக்கிறது எனவும் சி.ஐ.ஏ தெரிவித்திருக்கிறது.

## பாறாங்கல் என்றால் என்ன? அதையே தூளாக்கும் திருடர்!

தெற்கில் கடலரிப்பிலிருந்து கரையோரங்களைப் பாதுகாப்பதற்கென அரசு உலக வங்கியின் உதவியுடன் பெரும் செலவில் பாரிய திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றமை தெரிந்ததே.

இந்த நடவடிக்கையின் ஒரு கட்டமாகக் கடற்கரைப் பகுதிகளில், கடலரிப்பைத் தடுப்பதற்காகப் பெரும் பாறாங் கற்கள் போடப்பட்டு வருகின்றன.

ஒரு பக்கம் பாறாங்கற்களைப் போடும் வேலை நடக்க, மறுபுறத்தில் அந்தக் கற்களை அகற்றும் வேலையில் கும்பலொன்று தீவிரமாக அங்கு ஈடுபட்டு வருகின்றதாம்.

இந்தப் பாறாங் கற்கள் இக் கும்பலினால் அகற்றப்பட்டு, தூளாக உடைக்கப்பட்டுப் பின்னர் வீடுகட்டுவோருக்கு அவை விற்பனை செய்யப்படுகின்றதாம்.

களுத்துறை, பேருவளை, மொறட்டுவ, அங்குறணை போன்ற தென்கரையோரப் பகுதிகளிலேயே இந்தத் 'திருட்டு' அதிகளவில் இடம்பெறுகிறதாம்,

## விவரணப் படம்; சுவாமி விபுலானந்தர் 'ரூபவாஹினி' தயாரிக்கிறது!

சுவாமி விபுலானந்தரின் நூற்றாண்டை முன்னிட்டு 'ரூபவாஹினி' கூட்டுத்தாபனம் விபுலானந்தர் பற்றிய விவரணத்திரைப்படமொன்றைத் தயாரிக்கவுள்ளது

மட்டக்களப்பிலுள்ள சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்தக்கட்டிடம், சுவாமியின் சிலை என்பனவும் விவரணச் சித்திரத்தில் சேர்க்கப்படவுள்ளன.

விபுலானந்தரின் வாழ்க்கை வரலாறை முற்று முழுதாக உள்ளடக்கும் 'விபுலானந்தம்' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விவரணப்படத்திற்கான வசனத்தை அன்ரனி ஜீவா எழுதி வருகிறார்.

## வடக்குக் கிழக்கில 20 நெசவு நிலையங்கள் அரசினால நிறுவப்படுமாம்

நாடுமுழுவதிலும் 160 கைத்தொழில் நெசவுத் தொழிற்பேட்டைகள் நிறுவப்படவுள்ளன.

இவற்றில் இருபது வடக்குக் கிழக்கில் அமைக்கப்படுமென அறிவிக்கப்படுகிறது.

இந்தத் தொழிற்பேட்டைகள் ஒவ்வொன்றிலும் ஆறாயிரம் ரூபா பெறுமதியான நெசவு இயந்திரங்கள் பொருத்தப்பட்டு அவற்றின் மூலம் சாறி, சாரம், துவாய் என்பன உற்பத்தி செய்யப்படுமெனவும் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## வன்செயல்கள் குறையவில்லை

பஞ்சாப்பில் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னரும் அங்கு வன்செயல்கள் குறையவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் பஞ்சாப் பர்னாலா நகரில் ஐந்து மின்சாரத்துறை ஊழியர்கள் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## சிங்கப்பூரில் நியமனம்

ஈழத்தின் பிரபல கர்நாடக இசை மேதை கருணாகரன் சிங்கப்பூர் இந்திய நுண்கலைக்கழகத்தில் இசை ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்,

# மத்திய-மாகாண அரசுகளிடையேயான இழுபறி;

## யாழ் வீடமைப்பு செயலக விடயத்தில் மத்திய அரசுக்கே இறுதி வெற்றி!

மத்திய அரசினால் மாகாண அரசிடம் கையளிக்கப்பட்ட யாழ் தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டிடம் மீண்டும் பலத்த இழுபறிகளின் பின்னர் மத்திய அரசினால் பொறுப்பேற்கப்படுகின்றது.

வடபகுதியில் மாகாண அரசிற்கு வழங்கப்பட்ட மத்திய அரசுக்குரிய கட்டிடம் மாகாண அரசிடமிருந்து மீளப்பெறப்படுவது இதுவே முதற்தடவையாகும். தேசிய வீடமைப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான இச்செயலகக் கட்டிடம் 1976-ம் ஆண்டு அக்ரோபர் மாதம் 29-ம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

1989-ம் ஆண்டு யாழ் தேசிய வீடமைப்புத் திணைக்களம் மூடப்பட்டு வடகிழக்கு மாகாண அரசின் வீடமைப்பு நிர்மாணத் திணைக்களத்திடம் இக்கட்டிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

ஒன்றரை வருட காலமாக வடகிழக்கு மாகாண அரசின் கீழிருந்த யாழ் வீடமைப்புச் செயலகக் கட்டிடம் மீண்டும் இம்மாதம் முதல் மத்திய அரசின் வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சினால் பொறுப்பேற்கப்படவுள்ளது.

இவ்வீடமைப்புச் செயலகக் கட்டிடத்தில் இயங்கும் பனை அபிவிருத்திச் சபைத் தலைமைக் காரியாலயம், உள்ளூராட்சித் திணைக்களம், தேர்தல் திணைக்களம், காணிப் பதிவகம், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆகியன கட்டிட வாடகையை யாருக்குச் செலுத்துவது என்ற குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாம். (14)

## அரைகுறைபதத்துடன் 'றோஸ்'பாண்; தகவல் தரக் கோரிக்கை

பல இடங்களில் பேக்கறிகளில் சரியாகச் சூடு காட்டி, உரிய பதத்திற்கு வரும் முன்னரே, அரைகுறையாக 'றோஸ்' பாண்கள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு விடப்படுவதாகப் பொதுமக்கள் புகார் தெரிவித்து வருகின்றனர்.

இப்படியான தரமற்ற 'றோஸ்' பாண் தயாரிக்கும் பேக்கரிகள் பற்றிய விபரங்களைத் தத்தமது பிரிவு சுகாதார பரிசோதகர் அல்லது அப் பகுதிக்கான பேக்கறி உரிமையாளர் சங்கம் ஆகியனவற்றிற்குத் தெரிவிக்குமாறு யாழ்மாவட்ட உணவு,மருந்து பரிசோதகர் கேட்டுள்ளார். (13)

### பரீட்சை

தற்போது குடும்ப நல சேவையாளர்களாகப் பயிற்சி பெறுவோருக்கான பகுதி இரண்டு எழுத்துப் பரீட்சை இணுவிலில் உள்ள தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது. (13)

## கிராமப்புற வைத்தியசாலைகளில் பலத்த மருந்துத் தட்டுப்பாடு!

யாழ் மாவட்டத்திலுள்ள கிராமப்புற அரசாங்க வைத்தியசாலைகளில் பலத்த மருந்துத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

தற்போது நெருப்புக்காய்ச்சல்,வயிற்றோட்டம்,மலேரியா போன்ற தொற்றுநோய்கள் அதிகரித்து வருவதால் இதற்கான மருந்துவகைகள் மேற்படி வைத்தியசாலைகளில் கையிருப்பில் இல்லாதிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

அண்மையில் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்த குமண கப்பலிலும் மிகவும் குறைந்தளவு மருந்து வகைகளே இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (13)

## இரு தந்தங்களுடன் மாத்தறையில் அதிசயக் குழந்தை!

அண்மையில் மாத்தறை அரசினர் வைத்தியசாலையில் பெண்மணி ஒருவர் அதிசயக் குழந்தையொன்றைப் பிரசவித்துள்ளார்.

பெரிய தலையுடனும், இரு நீண்ட தந்தம் போன்ற பற்களுடனும், உதடு வெளியிலே தொங்கிக் கொண்டிருக்கும் வகையிலும் இக்குழந்தையின் அமைப்பு உள்ளது.

காதுக்குப் பதிலாக இரு துவாரங்கள் காணப்படுகின்றன மூக்கு உள்வளைந்து விகாரமாகக் காணப்படுகின்றது; (22)

## அமெ. கடற்படைத்தள நகர்வால் ஆசியாவுக்கு ஆபத்தே! 'இந்துஸ்தான் டைம்ஸ்'

அமெரிக்க கடற்படைத் தளத்தை பிலிப்பைன்ஸிலிருந்து சிங்கப்பூருக்கு மாற்றுவதற்கு எடுக்கப்படும் முயற்சி ஆசிய, பசுபிக் பிராந்தியத்திற்கு ஆபத்தாகவே அமையும் என 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை எழுதியுள்ளது.

பிலிப்பைன்ஸ் அரசியல் நிலைவரம் காரணமாகவே இந்த இடமாற்றம் என அமெரிக்க ஜனாதிபதி புஷ் கூறினாலும் உண்மையில் ஆசிய பசுபிக் பகுதிகளில் தனது செல்வாக்கை நிலைநிறுத்த அமெரிக்கா எடுக்கும் முயற்சியே இது.

விருந்தோம்பலில் புகழ் பெற்ற, சுதந்திரமான நாடு என வர்ணிக்கப்படும் சிங்கப்பூரும், அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு இணங்கியுள்ளதன் மூலம் தெரிந்தோ, தெரியாமலோ ஆபத்தொன்றை எதிர்நோக்குகிறது எனவும் இந்துஸ்தான் டைம்ஸ் மேலும் எழுதியுள்ளது

### அரிச்சுவடி ஏடுகள்

எதிர்வரும் திங்கட்கிழமை தைப்பூசத்தினத்தன்று வித்தியாரம்பம் செய்துவைக்கவுள்ள பாடசாலைகள், நூல் நிலையங்கள் வேண்டிய தமிழ் அரிச்சுவடி ஏடுகளைத் தம்மிடம் நேரில் விண்ணப்பித்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளும்படி யாழ் மில்க்வைற் நிறுவன அதிபர் கேட்டுள்ளார்.

### உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ் பாணம் மடம் வீதியிலமைந்துள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் முன்னாள் பெருளாளர் அமரர் சிற்றம்பலம் பஞ்சலிங்கம் அவர்களின் 7 ஆவது ஆண்டு நினைவையொட்டி 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியினை மேற்படி சனசமூக நிலையம் நடாத்த இருக்கின்றது.

யாழ் மாவட்டங்களிலுள்ள

## பாகிஸ்தானிடம் அணுகுண்டு;

### அமெரிக்கா முதல் தடவையாக ஊர்ஜிதம்! இராணுவ உதவி இனித் தொடராது

அணுசக்தியினால் வெடிக்க வைக்கக் கூடிய அணுகுண்டுகளை பாகிஸ்தான் வைத்திருப்பதை அமெரிக்கா முதற் தடவையாக இப்போது ஊர்ஜிதம் செய்துள்ளது.

பாகிஸ்தான் அணு ஆயுதங்களை வைத்திருப்பதைக் காரணம் காட்டி பாகிஸ்தானுக்கான இராணுவ உதவியை அமெரிக்கா 1990 அக்டோபர் மாதம் முதல் நிறுத்தியிருந்தது.

தற்பொழுது அணு ஆயுதங்களை பாகிஸ்தான் வைத்திருப்பது அமெரிக்காவினால் ஊர்ஜிதப்படுத்

## தென்னை; உரத்தின் அவசியமும் உற்பத்தி கூட்டும் வழிமுறையும்

தமிழீழப் பிரதேசத்தில் தேங்காயின் உற்பத்தியைக் குறுகிய காலத்தில் கூட்ட வேண்டுமாயின் முக்கியமாக தென்னை மரங்கள் தறிப்பதனைத் தவிர்க்க வேண்டும். அடுத்து தென்னை மரங்களுக்குப் பசளையிடுதல் அவசியமானதாகும். அநேகமாக நமக்கு இலகுவில கிடைக்கக் கூடிய பசளைவகைகளை இதற்கு உபயோகப்படுத்தல் பொருத்தமானதாகும். மாட்டெரு, ஆட்டெரு, கோழி எரு போன்றவற்றைப் பாவிக்கலாம். பூத்துக் காய்க்கும் தென்னை மரங்கள் ஒவ்வொன்றிற்கும் உலர்ந்த மாட்டெருவாயின் 20 கிலோவுடன் சப்போஸ் பொசுபேற் 400 கிராமும் மியூரியற் ஒவ் பொட்டாஸ் 1 கிலோவும் கலந்து அடிமரத்திலிருந்து 3 - 4 அடி தூரத்தில சுற்றவர இடைவெளி விட்டு ½ அங்குல ஆழத்திற்கு, 3 அடி அகலத்தில் குழி வெட்ட வேண்டும், பின்பு மாட்டெருக் கலவையை அந்த வெட்டிய குழிக்குள் கொட்ட வேண்டும், இதனை மண்ணால் மூடி காய்ந்த தென்னோலை அல்லது பனை ஓலையினால் மூடி விட்டால் ஈரலிப்புப் பாதுகாக்கப்படும். இதேபோல ஆட்டெருவாயின் 7 கிலோவுடன் 700 கிராம் சப்போஸ் பொசுபேற்றும், 1 கிலோ மியூரியற் ஒவ் பொட்டாசும் கலந்து போடலாம் கோழி எருவாயின் 15 கிலோ போதுமானது இத்துடன் 150 கிராம் சப்போஸ பொசுபேற்றும், 850 கிராம் மியூரியற் ஒவ் பொட்டாசும் கலந்து மேற்குறிப்பிட்ட முறையில தென்னைக்கு இடலாம்,

### மாடுகளைத் தென்னை மரத்தில் கட்டுதல்

தென்னை மரத்தின் அடியிலிருந்து 6 அடி தூரத்தில் 1 சோடி மாடுகள் நிற்கக் கூடியதாகக் கட்ட வேண்டும். மாட்டின் பின்பக்கம் 6 அடி தூரத்திற்குள் இருத்தல் வேண்டும். இப்படிப் 10 இரவுகள் கட்டி விடல் வேண்டும், மரத்தைச் சுற்றவர மாட்டுச் சாணம் விழுந்தவுடன் 200 கிராம் சப்போஸ் பொசுபேற் (Saphos posphate), 750 கிராம் மியூரியற் ஒவ் பொட்டாஸ் (Muriate of potjash) இந்த வட்டத்தில் தூவி மண்ணினால் கலந்து விடுதல் நல்லது ஒரு வருடத்தில் ஒரு முறையேனும் இதனை ஒவ்வொரு மரத்திற்கும் செய்தால் விளைவு அதிகரிக்கும்.

### இயற்கை உரம்

விளைவு குறைந்த, ஒல்லியாகக் காய்க்கும் தென்னை மரங்களுக்கு சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய சீமைக் கிளுவை என அழைக்கப்படும் கிளிரிசிடியா (Gliricidia) அல்லது இப்பில் இப்பில் (Ipil Ipil) இலைகள் ஆகியனவற்றை மண்ணுள் இட்டு மூட வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் செயற்கை உரங்கள் வாங்குவது கஷ்டமான காரியம் ஆகும். விலையும் கூடியளவு ஆகும். தென்னை மரத்தின் வேர் வெட்டப்பட்டு புதிய வேர்களை அடியிலிருந்து உண்டாகச் செய்தல் நல்லது. அடிமரத்திலிருந்து 1 அடி தூரம் தள்ளி, 1 அடி ஆழம், 2 அடி அகலமுடைய குழியாக மரத்தின் கால்வாசி வட்டத்திற்கு வெட்ட வேண்டும், இப்படிச் செய்யும் போது 100 தொடக்கம் 125 வேர்கள் வெட்டப்படுகின்றன. பின்பு இந்தக் குழியை 25 கிலோ தொடக்கம் 30 கிலோ வரையான கிளிரிசீடியா (Gliricidia) என அழைக்கப்படும் சீமைக்கிளுவை இலைகளை அல்லது இப்பில் இப்பில் இலைகளைப் போட்டு மண்ணினால் நில மட்டத்திற்கு மூடிவிட வேண்டும்.

இரு வருடங்களுக்கு ஒருமுறை இதேமாதிரி ஒவ்வொரு கால்வாசி வட்டத்திற்கும் செய்தல் வேண்டும். 6 வருடங்களில் 4 தடவை இப்படிச் செய்து முடிக்கலாம் இப்படியான செயல்முறையை தென்னை ஆராய்ச்சி நிலையத்தினர் மேற்கொண்டு ஒரு வருடத்தில் இதன் உச்ச பலனையும் பெற்றுள்ளனர் ஒரு வருடத்தில் 15-20 வரையான தேங்காய்கள் காய்த்த ஒரு மரத்தில் இப்படியான முறை பாவிக்கப்பட்டபோது 50 - 60 வரையான தேங்காய்கள் அதிகரித்துக் காணப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர். நமது தமிழீழப் பிரதேசத்திலுள்ள அனைத்து விளைவு குறைந்த தென்னை மரங்களுக்கும், ஒல்லியாகத் தேங்காய் காய்க்கும் தென்னை மரங்களுக்கும் இந்த முறையைப் பயன்படுத்தி தேங்காய் உற்பத்தியினைக் குறுகிய காலத்தில் கூட்ட வாய்ப்பு உண்டு.

அணுசக்தியினால் வெடிக்க வைக்கக்கூடிய அணுகுண்டு களை பாகிஸ்தான் வைத்தி ருப்பதை அமெரிக்கா முதற்

தடவையாக இப்போது ஊர் ஜிதம் செய்துள்ளது

பாகிஸ்தான் அணுஆயுதங் களை வைத்திருப்பதைகார

# செய்தி உலகம்

## ஒருகணம் ஊதித்தள்ள . . .

1982-ல் அமெரிக்க மக்கள் சுமார் 25 பில்லியன் டாலர் களை சிகரட்டுகளுக்காக செலவிட்டுள்ளனர். ஒவ்வொரு நாளும் 3000 முதல் 5000 அமெரிக்க சிறுவர், சிறுமியர் முதன் முதலாக சிகரட் பிடிக்கக் கற்றுக்கொள்கின்றனர். இவர்களின் பெரும் தொகையானோர் பெரியவர்களாகும் வரை புகைபிடிக்கும் பழக்கத்தை நீடித்துக்கொள்கின்றனர்.

## கஸட்டில் அகராதி!

ஸ்பெயினில் ஸ்பானிஷ் ஆங்கில அகராதி ஒன்று கஸட் டில் வெளிவந்துள்ளது

நீதில் உச்சரிப்பு முறைகளும் அடங்கியுள்ளன. இவ்வக ராதியில் சுமார் 2,50,000 வார்த்தைகள் அடங்கியுள்ளன. (22)

## முடியாவிட்டால் . . . ?

அண்மையில் பீகாரில் இந்திரி நகரில் பெண்கள் புதுமை யான ஊர்வலமொன்றை நடத்தினர்.

பெண்கள் பலர் சேர்ந்து காப்புக்களை (வளயல்களை) கோர்வையாக கோர்த்தபடி பொலிஸ் நிலையத்துக்கு ஊர் வலமாகச் சென்றனர்.

இவர்கள் பொலிஸாரைப்பார்த்து இப்பகுதியில் குற்றச் செயல்கள் மலிந்து விட்டன. குற்றவாளிகளைப் பிடிக்க முடி யுமானால் பிடியுங்கள் அல்லது காப்புக்களை அணிந்து வீடு சென்று அடுக்களையில் அமருங்கள் என கோஷமிட்டவாறு ஊர்வலமாகச் சென்று பொலிஸ் அதிகாரிகளிடம் மகஜ ரொன்றைக் கையளித்தனர். (22)

ணம் காட்டி பாகிஸ்தானுக் கான இராணுவ உதவியை அமெரிக்கா 1990 அக்டோபர் மாதம்முதல்நிறுத்தியிருந்தது.

தற்பொழுது அணு ஆயு தங்களை பாகிஸ்தான் வைத்திருப்பது அமெரிக்கா வினால் ஊர்ஜிதப்படுத் தப்பட்டுள்ளதையடுத்து இந்த உதவிகளை மீண்டும் வழங்குவதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதாக வும் தெரிவிக்கப்படுகின்றது

இதே வேளை அணுசக்தி கொண்ட இஸ்லாமிய நாடுக ளின் கூட்டமைப்பில் பாகிஸ் தானும் இணைந்து கொள்ள லாமெனவும் தற்பொழுது எதிர்பார்க்கப் படுகின்றது.

ளின் பெருமுள்ளளர் அமரர் சிற்றம்பலம் பஞ்சலிங்கம் அவர்களின் 7 ஆவது ஆண்டு நினைவையொட்டி 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியினை மேற் படி சனசமூக நிலையம நடாத்த இருக்கின்றது.

யாழ் மாவட்டங்களிலுள்ள சனசமூக நிலையங்களின் விளையாட்டுக் கழகங்கள் இச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளலாமென்றும், விண் ணப்பங்கள் நேரடியாக விண் ணப்பிக்கப்பட வேண்டுமென் றும், விண்ணப்ப முடிவு திகதி 20-01-92 என்றும் மேற் படி சனசமூக நிலையச் செய லாளரால் அறிவிக்கப்படுகி றது (25)

## ஹைதராபாத் கிரிக்கெட்; இலங்கை தோல்வியுற்றது!

ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் இலங்கை, பாகிஸ் தான் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற 3-வது ஒருநாள் கிரிக்கெட் பந்தயத்தில் பாகிஸ்தான் அணி 59 ஓட்டங் களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 40 பந்து மாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 241 ஓட்டங்களைக் குவித்தது.

இலங்கை அணி அதன் துடுப் பாட்டத்தில் 40 பந்து மாற் றங்களில் 9 இலக்குகளை இழந்து 182 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதினைக் தோல்வியைத் தழுவிக் கொண்டது. (16)

## போட்டி

அமரர் ஜீவரெத்தினத்தின் ஞாபகார்த்தமாக, அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழ கத்தினரால் நடாத்தப்படும் 'செற் அப்' முறையிலான கர பந்தாட்டப் போட்டித் தொடரில் இடம்பெற்ற ஆட் டத்தில் மோகனதாஸ் அணியை காங்கேசன்துறை அணி 15: 12, 15: 12 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரு நேர் செற்றுகளில் தோற் கடித்தது. 16

மேலும்கொண்டு ஒருவருடத்தில் இதன் உச்ச பலனையும் பெறுவுள்ளனர் ஒருவருடத்தில் 15-20 வரையான தேங்காய் கள் காய்த்த ஒரு மரத்தில் இப்படியான முறை பாவிக் கப்பட்டபோது 50 - 60 வரையான தேங்காய்கள் அதிகரித் துக் காணப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர். நமது தமிழீழப் பிரதேசத்திலுள்ள அனைத்து விளைவு குறைந்த தென்னை மரங்களுக்கும், ஒல்லியாகத் தேங்காய் காய்க்கும் தென்னை மரங்களுக்கும் இந்த முறையைப் பயன்படுத்தி தேங்காய் உற்பத்தியினைக் குறுகிய காலத்தில் கூட்ட வாய்ப்பு உண்டு.

## செயற்கை உரம்

5 வருடங்களிற்குட்பட்ட தென்னங்கன்றுகளுக்குப் பொது வாக Y P M (Young Palm Mixture) என அழைக்கப்படும் 'இளம் தென்னங்கன்றுக்கலவை' என்ற உரத்தினைப் பிரயோ கிக்கலாம் இந்த உரம் குறிப்பிட்ட சில உரங்களின் கலவை ஆகும் இதனை முன்பு கொழும்பு உரக்கூட்டுத்தாபனத்திலி ருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது ஆனால் இன்று இந்தக் கலவை யாழ்ப்பாணப் பிரதேசத் திற்கு வருவதில்லை எனவே நாம், இதனைக் கீழ்க் குறிப் பிடப்படும் அளவுகளில் உரத்தினைக் கலவை செய்து தென் னங்கன்றுகளுக்குப் பாவிக்கலாம்.

## Y.P.M [அமோனியா கலவை]இளம் தென்னங் கன்றுக் கலவை

| | |
|---|---|
| அமோனியம் சல்பேற் → 390 கிராம்<br>சுப்போஸ்பொசுபேற் → 210 கிராம்<br>மியூரியத் ஒவ்பொட்டாசு → 400கிராம் | எடுத்து மண்வெட்டி யால் கலக்கலாம் இது 1கிலோ Y.P M ஐத் தயாரிக்கத் தேவை யான உரவகைகள் ஆகும். |

4—5 வருடங்களிற்குட்பட்ட தென்னங்கன்றுகளுக்கு ஒரு மரத்திற்கு 1kg Y P M போதுமானது கன்றின் அடியிலி ருந்து 5 அடிவரை தென்னங்கன்றின் அடியில் சாதார ணமாகக் கொத்திப்பிரட்டிய மண்ணுடன் இதனைத் தூவி விட்டு நன்றாக மண்ணைக் கிளறிவிடவும். பின்பு தென்னங் கன்றுகளைச் சுற்றிவர உரம் இட்ட பகுதிக்கு மேலே காய்ந்த தென்னை ஓலை, பனை ஓலைகளினால் மூடி விடுதல் நன்று. இது ஈரலிப்பினைப் பாதுகாக்கும். நிலத்தில் ஈரலிப்பு உள்ள நேரத்தில் அல்லது கன்றுக்குத் தண்ணீர் ஊற்றி விட்டு மேற் படி உரத்தினைப் பாவிக்கலாம்,

—4 ஆம் பக்கம் பார்க்க

# இந்தியா பிளவு படாது பிரதமர் மீண்டும் வலியுறுத்து

வேறுநாடுகளைப் போன்று இந்தியாவும் துண்டுதுண்டாக பிரிந்துவிடாது என்கிறார் இந்தியப்பிரதமர் நரசிம்மராவ் நேற்று பரிதாபாத்தில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டுபேசிய இந்தியப்பிரதமர், இந்தியா உலக மாற்றங்களுக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக்கொள்ள தனது விவேகத்தை பயன்படுத்துகிறது என்றார்,

மாறிவரும் சூழ்நிலையை ஏற்காத நாடுகளே பிளவுபட்டு விட்டன எனவும் நரசிம்மராவ் குறிப்பிட்டார்.

இந்தியப்பிரதமர் சில தினங்களுக்கு முன்னரும் பொது வைபவம் ஒன்றில் பேசுகையில் இந்தியா மற்றைய நாடுகளைப் போன்று பிளவடைய மாட்டாது என மீண்டும் மீண்டும் வலியுறுத்திப் பேசியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் உள்ள 25 மாநிலங்களில் பெரும்பாலானவை தமக்கு கூடிய அதிகாரம் கோரி மத்திய அரசுடன் முரண்பட்டுவருகின்றன, இந்நிலையில் சோவியத்யூனியன். யூகோஸ்லேவியா நாடுகளின் குடியரசுகள் தனித்தனி நாடுகளாக பிரிந்து சென்றமை இந்திய கூட்டமைப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## ஐ, நா- பாதுகாப்புச் சபையில்

# இந்தியா நிரந்தர அங்கத்துவம் பெறவேண்டும்

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர அங்கத்துவ நாடாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என அமெரிக்க செனட்டர் டானியல் மொய்நிகான் தெரிவித்துள்ளார்.

இந்தியா மிகப் பெரிய ஜனநாயக நாடு என்ற வகையில் இந்த நியமனம் வழங்கப்பட வேண்டுமெனத் தெரிவித்த அவர் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் இம்மாத முடிவில் கூடும் போது ஐம்பது ஆண்டு காலத்தைக் கொண்ட ஐ. நா. சபையின் சாசனத்தைப் பற்றி ஆராய்வர் என நம்புவதாகவும் தெரிவித்தார்

தற்போது புதுடில்லி வந்திருக்கும் டானியல் மொய்நிகான் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதும் முன்னர் இரண்டு வருடங்கள் இந்தியாவில் அமெரிக்கத் தூதுவராகக் கடமை ஆற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### திவுல—

களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

கனகரத்தினம் மகா வித்தியாலயம், சன்மார்க்க மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தங்கியுள்ளவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மேற்படி பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு குடியமர்த்தப்படவுள்ளதாக தெரிய வருகின்றது,. 46

### அகதிகளின்—

செய்யப்பட்டு லொறியில ஏற்றப்பட்டது,

இப் பொருள்கள் அகதி முகாமுக்கு வழங்கப்படாமல் ஏறாவூரில் உள்ள தனியார் கடையில்விற்பதற்காகலொறியில் இருந்து இறக்கப்படும் போது இரகசியத் தகவலையடுத்து பொலிஸார் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

இது தொடர்பாக உதவி அரசாங்க அதிபர் சங்கக்கடை முகாமையாளர் உட்பட நால்

### போலி—

சரீரப்பிணையிலும் விடப்பட்டார்.

அமெரிக்க போலி நோட்டுக்களை கண்டுபிடிக்கும் நிபுணர்கள் இலங்கையில் இல்லை என லெபனான் பிரஜையின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் வாதிட்டார்,

இவர் இவற்றை பெய்ருட்டில உள்ள வங்கியில் பெற்றதாகவும் வியாபார நோக்கமாக கடந்த மூன்று வருடங்களாக இலங்கை வந்துபோவதாகவும் நீதிமன்றத்தில் கூறப்பட்டது 06

### முஸ்லிம் -

யர்கள் மன்னாருக்குத் திரும்பாவிட்டால் அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படமாட்டாதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

எனினும் முஸ்லிம்கள் அங்கு திரும்பிவரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 14

### 13 தமிழ்...

வர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் ஒருவராவ

★ கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து

# ஐ. தே. க வுக்கு எதிராக மேலும் இரு எம். பிக்கள் ஆட்சேப மனு

ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆரியரத்தின ஜெயதிலக, எம். ஏ முத்துபண்டா ஆகிய இரு எம். பிக்களும் தம்மை வெளியேற்றியதை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

அரைவாசிக்கு மேற்பட்ட எம் பிக்களுடன் சேர்ந்து ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணையை தாக்கல் செய்தேன் அது சபாநாயகர் எம், எச் மொஹமட்டினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது

இதன் பின்னர் ஏனைய அரச எம், பிக்களுடன் சேர்ந்து அப்பிரேரணையில் நான் இட்ட கையொப்பத்தையும் வாபஸ் பெறுவதாக அறிவித்தேன்

அத்துடன் ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையை நிராகரிக்குமாறு கோரி செப்டம்பர் 2இல் அரச பாராளுமன்றக்குழு நிறைவேற்றிய தீர்மானத்திலும் நான் கையொப்பமிட்டேன்.

இதன் பின்னர் எனது நடத்தையைபற்றி விசாரிக்க டிசம்பர் 6ஆம் திகதி நடைபெற்ற ஐ. தே. க செயற்குழு கூட்டத்தில கலந்துகொள்ளுமாறு எனக்கு கடிதம் அனுப்பப்பட்டது ஆனால் அக்கடிதம் எனக்கு கிடைக்கவே இல்லை.

எனவே எனது சார்பிலான நியாயத்தை விளக்கச் சந்தர்ப்பம் தரப்படாமல் என் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இவ்வாறு கம்பஹா மாவட்ட எம். பி, ஆரியரட்ன ஜெயதிலக பொலநறுவ மாவட்ட எம், பி முத்துபண்டா ஆகியோர்தமது மனுவில குறிப்பிட்டுள்ளனர், 08

# 300 தபால் பொதிகள் கொழும்பில் தேங்கியுள்ளன

யாழ் குடாநாட்டில் தபால் பொதிகள் 300 க்கு மேல் கொழும்பு பிரதம தபாலகத்தில் தேங்கிக் கிடப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒருமாத காலமாக யாழ்ப்பாணப் பகுதிக்கு தபால் பொதிகள் கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்படவில்லையெனவும் தெரிய வருகிறது.

அடுத்துவரும் கப்பலில் இத்தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் குடாநாட்டுத் தபாலகங்களுக்குரிய தபால் முத்திரைகள் வழமையிலும் பார்க்க கூடுதலாக வரவிருப்பதாகவும் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (06,07)

### மன்னாரில்,..

ஓடினர்

இத்தாக்குதலில் படையினரிடமிருந்து பல ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

### தேக்கவத்தை—

அரசாங்க அதிகாரிகளுக்கான வதிவிட கட்டிடங்கள் அமைப்பதற்காகவே இக்குடும்பங்கள் வெளியேற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. 14

### கர்நாடக...

கர்நாடகத்தில் தொடர்ந்து தமிழகத்தவர்கள் தாக்கப்பட்டால் எனது ரசிகர்கள் அப்பாவிகளின் காப்பரண்களாக மாறுவர் எனவும் அவர் எச்சரித்தாராம்,

### அம்பாறையில்...

அக்கரைப்பற்றுப் பிரஜைகள் குழுவின் முயற்சியை அடுத்துப் பிரஜைகள் குழுவின் பொறுப்பில் 115 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர் கைது செய்யப்பட்டவர்களில் 20 இளைஞர்கள் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 14

### அனுரா...

### பூநகரி...

டனர்

சேத விவரங்கள் தெரியவரவில்லை 07

### மட்டக்களப்பு...

இங்கு 5 வீடுகள் எரிக்கப்பட்டன. 5 பொதுமக்கள் படையினரால் கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டனர்.

இதேபோன்று கடந்த திங்களன்று பாலையடி வெட்டை இராணுவத்தினர் வெல்லாவெளியில் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொதுமகன் ஒருவர் பலியானார்.

இதேதினம் பெரியபோரதீவு படையினரும் தமிழ்க்குழுவொன்றும் ரோந்து சென்றபோது வயலில் வேலைசெய்து கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர் இதில் இருவர் பலியாகினர்.

இவர்களது சடலங்களை படையினர் முகாமுக்கு இழுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### மண்டைதீவி...

# பாடசாலை மாணவருக்கு குறைந்த விலையில் சீருடை

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையில் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன,

கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்ட இச் சீருடைகள் தனியார் கடைகளிலும் பார்க்க குறைந்த விலையில் விற்பனைசெய்யப்பட்டு வருகின்றன. (06)

# யாழ் கரையோர மக்களுக்கு விசேட உணவுப் பத்திரங்கள்

யாழ், உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட யாழ்ப்பாணக் கரையோரப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு தொழிலை இழந்திருக்கும் மீனவக் குடும்பங்களுக்கு கிராம சேவையாளர்கள் மூலம் விசேட உணவுப் பத்திரங்கள் வழங்கும் பணி நேற்று ஆரம்பமாகியது.

பல நூற்றுக் கணக்கான குடும்பங்கள் பட்டினியை எதிர்நோக்கும் நிலையில் இருக்கின்றன,

உணவுப் பத்திரங்கள் விநியோகம் முடிவடைந்ததும் அதற்குரிய உணவுப் பொருள்கள் பின்னர் வழங்கப்படும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன, 07

## பல்கலைக் கழகக் கூட்டம்

பல்கலைக்கழக அனைத்து மாணவர்களுக்கான விசேட பொதுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் நடைபெறும் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம்தருமாறு பல்கலைக்கழக மாணவர் பேரவை கேட்டுள்ளது,

## ஓர் உ. அ. அ. பிரிவில் 118 விதவைகள்

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற இராணுவ நட

## இலங்கை வங்கி விவசாயக் கடன்

புலோலி மேற்குப் பகுதியில் 1991 - 1992 ஆண்டுக்கான வெங்காயச் செய்கைக்கு பருத்தித்துறை இலங்கை வங்கி 6, 90,000 ரூபாவை பருவகாலக் கடனாக வழங்கியுள்ளது,

## அரிசி விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், சுன்னாகம், திருநெல்வேலிச் சந்தைகளில் அரிசி கிலோ 35 ரூபாவிற்கு

இது தொடர்பாக உதவி அரசாங்க அதிபர் சங்கக்கடை முகாமையாளர் உட்பட நால்வரை மட்டக்களப்பு பொலிஸார் கைது செய்துள்ளதும் தெரிந்ததே 06

படுகிறது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் ஒருவரால் தாம் அழைத்து வரப்பட்டதாகப் பொலிஸாரிடம் அவர்கள் தெரிவித்தனர். 08

## தென்னை...

## A.P.M(அமோனியாக் கலவை)முதிர்தென்னை மரக் கலவை

அமோனியம் சல்பேற் → 490 கிராம்
திரி சுப்பபொசுபேற் → 120 கிராம்
மியூரியத்ஒப்பொட்டாசு → 390 கிராம்

} எடுத்து மண்வெட்டியினால் கலக்கவும். இது 1 கிலோ APM ஐத் தயாரிக்கதேவையான உரவகைகள் ஆகும்.

முதிர் தென்னை மரக்கலவையானது (APM, Adult Palm Mixture) 5 வருடங்களிற்கு மேற்பட்ட தென்னை மரங்களுக்கு குறிப்பாக விளைவு குறைந்து காணப்படும் தென்னை மரங்களிற்கு மரத்தின் அடியிலிருந்து மண்ணைக் கொத்திப் புரட்டியபின்பு ஒரு மரத்திற்கு 2½ தொடக்கம் 3 கிலோ (APM) முதிர் தென்னை மரக் கலவையைத் தூவி மண்வெட்டியால் கிளறிவிடவும். பின்பு காய்ந்த தென்னை ஓலை அல்லது பனை ஓலையினால் அல்லது பொச்சு மட்டையினால் உரமிட்ட வட்டப்பகுதியை மூடி விடலாம். இதுவும் மண் ஈரலிப்பாக உள்ள நேரத்தில் இடலாம். வருடத்திற்கு ஒருமுறை இந்த அளவினை ஒவ்வொரு மரத்திற்கும் பாவித்தால் விளைவு அதிகரிக்க வாய்ப்புண்டு.

திரு ஜெ சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கஸ்தூரியார் வீதி 'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 17-01-1992 இல் அச்சிட்டுவெளிவிடப்பெறத்து

தெரிவிக்கப்படுகிறது. 14

## அனுரா...

சிறிமணி பிரேமரட்ன கமகேயின் கொலை தொடர்பாக கைதாகி சிறையில் உள்ள சந்தேக நபர்களை அனுரா பண்டாரநாயக்கா சென்று பார்வையிட்டது கட்சி உயர் மட்டத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது 08

## பிலிப்பைன்ஸ்—

பெண் கெரில்லாக்கள் கிரனேட்டுகள் மூலம் படையினரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து வாகனங்களில் தமது படையினர் சென்றபோது வீதியின் இரு மருங்கிலும் பதுங்கியிருந்து புதிய மக்கள் இராணுவம் என்ற கெரில்லா அமைப்பினர் தாக்குதல் நடத்தினர் எனவும், மோதல்கள் நான்கு மணி நேரம் நீடித்தது எனவும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது

தாக்குதல் நடத்திய பெண் கெரில்லாக்கள் படையினரின் ஆயுதங்கள் வானொலிக் கருவிகளையும் எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (08)

விக்கப்படுகிறது.

## மண்டைதீவி...

வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

கடந்த வாரத்திலிருந்து இப்பகுதியை நோக்கித் தினமும் கடும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 07, 06

## புஷ்...

நபர் ஒருவர் ஜப்பானிலிருந்து தொலைபேசி மூலம் சி என். என். தொலைக்காட்சிநிலையத்துக்கு, மயங்கி வீழ்ந்த புஷ் மரணமாகிவிட்டார் என அறிவித்தார்.

செய்தியை அறிவிக்கத் தயாரான போது சி, என், என் நிறுவன செய்தி ஆசிரியரொருவர் இதில் மோசடி இருப்பதாக உணர்ந்து ஜப்பானுடன் தொடர்பு கொண்டார், அப்போது உண்மை தெரியவந்தது.

ஜனாதிபதி புஷ் மரணமாகிவிட்டார் என ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.. என்று அறிவிக்க தயாரான செய்தி இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது. 08

## 118 விதவைகள்

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது ஆலையடிவேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 118 இளம் பெண்கள் கணவனை இழந்து விதவைகளாக்கப்பட்டுள்ளனர், 08

யாழ்ப்பாணம், சுன்னாகம், நல்லூர் திருநெல்வேலிச் சந்தைகளில் அரிசி கிலோ 35 ரூபாவிற்கு மேல் விற்கப்பட்டு வருகிறது

யாழ் செயலகத்தினால் அரிசி கிலோ 31 ரூபாவிற்கு மேல் விற்கக் கூடாது என முன்னர் அறிவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. 07

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில்
நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்
"உயிர்த்த மனிதர் கூத்து"
நாடகம்

18-01-1992 :- சனிக்கிழமை பி. ப, 5-00 மணி
அளவெட்டி மாவீரர் கலை அரங்கம்

19-01-1992 :- ஞாயிற்றுக்கிழமை பி. ப, 4-00 மணி
மருதனாமடம், இராமநாதன் கல்லூரி

01-02-1992:- சனிக்கிழமை பி. ப. 3-30 மணி
யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கு

விடுதலைப் புலிகள் கலை. பண்பாட்டுக் கழகம்
தலைமைச் செயலகம்,

அன்பளிப்பு: 10 ரூபா தமிழீழம்,

01033